# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1990 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, பணிக்கொடைக் கொடுப்பனவு (திருத்தச்) சட்டம்

---

*[1990, நவெம்பர் மாதம் 29 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

---

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

*1990 நவெம்பர் மாதம் 30 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

***இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.***

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை: சதம் 60* *தபாற்செலவு: ரூபா 1.00*

# 1990 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, பணிக்கொடைக் கொடுப்பனவு (திருத்தச்) சட்டம்

[1990, நவெம்பர் மாதம் 29 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச.வ.—ஓ 54/89
2064

## 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம், 1990 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, பணிக்கொடைக் கொடுப்பனவு (திருத்தச்) சட்டமெனா எடுத்துக்காட்டப்படலாம்:

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தில் 7அ, 7ஆ, 7இ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் 7 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 7அ, 7ஆ, 7இ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:—

"பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் அல்லது பகிரங்கக் கம்பனிகளாக மாற்றப்பட்ட அரசாங்கத்துக்குச் சொந்தமான தொழிற் பொறுப்பு முயற்சிகளின் வேலையாட்களுக்குப் பணிக்கொடைக் கொடுப்பனவு செய்தல்.

7அ. (1) பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் பணிகளைப் பொறுப்பேற்பதற்கு அல்லது அரசாங்கத்துக்குச் சொந்தமான தொழிற் பொறுப்பு முயற்சியொன்றினைப் பொறுப்பேற்றுக் கொண்டு நடாத்துவதற்கு, 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க பகிரங்கக் கூட்டுத்தாபனங்களை அல்லது அரசாங்கத்துக்குச் சொந்தமான தொழிற் பொறுப்பு முயற்சிகளைப் பகிரங்கக் கம்பெனிகளாக மாற்றுதல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின் மூலம் கம்பெனியொன்று கூட்டிணைக்கப்பட்டுவிட்டது என வெளிப்படுத்தப்படுமிடத்து, அக் கம்பெனியின் வேலையாள் ஒருவராக வருகின்றவரும், அத்துடன் அக் கட்டளை ஆக்கப்பட்டதன்மேல் இச் சட்டத்தின் கீழ் பணிக்கொடை எதனதும் கொடுப்பனவுக்கு, உரித்துடையவராக வருகின்றவரான அக் கூட்டுத்தாபனத்தின் அல்லது பொறுப்புமுயற்சியின் எவரேனும் வேலையாளுக்கு இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளில் எது எவ்வாறிருப்பினும், ஒன்றில் காசாகவோ அல்லது இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படும் முறிகளின் வடிவத்திலேயோ அத்தகைய பணிக்கொடைக் கொடுப்பனவு செய்யப்படல் வேண்டும்.

010425—1,170(08/90)

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டிருக்கும் முறி ஒவ்வொன்றுக்கும், இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படும் நடுத்தர கால அரசாங்க முறிகளுக்கு அப்போதைக்கு நடைமுறையில் கொடுபடற்பாலதான வட்டி வீதங்களில் வட்டி செலுத்தப்படுதல் வேண்டும், அத்துடன்—

(அ) அக்கம்பனி தொடர்பில், 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கப் பகிரங்கக் கூட்டுத்தாபனங்களை அல்லது அரசாங்கத்துக்குச் சொந்தமான தொழிற் பொறுப்பு முயற்சிகளைப் பகிரங்கக் கம்பெனிகளாக மாற்றுதல் சட்டத்தின் (2) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளைத் தேதியிலிருந்து பத்து ஆண்டுகள் காலப்பகுதியொன்று முடிவுற்றதன்மேல்; அல்லது

(ஆ) அத்தகைய கம்பெனியினால் அத்தகைய வேலையாளின் சேவைகள் (இளைப்பாறுதல் மூலமாகவோ, இறப்பு மூலமாகவோ, சட்ட நடைமுறை மூலமாகவோ அல்லது வேறு விதமாகவோ) முடிவுறுத்தப்பட்டதன் மேல்;

(இ) அத்தகைய கம்பெனியின் பங்குகள் பொது மக்களுக்கு விற்பனைக்காக முதன்முதலாக விடப்படும் தேதியன்று,

இவற்றுள் எது முந்தியதோ அப்போது முறியானது காசாகப் பெறப்படற்பாலதாதல் வேண்டும்.

(3) விற்பனைக்கு விடப்படும் கம்பெனியின் எவையேனும் பங்குகளைக் கொள்வனவு செய்வதற்காக (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டிருக்கும் முறி எதுவும் அதை வைத்திருப்பவரினால் அது முதிர்வு அடையமுன்னர் ஒப்புவிக்கப்படலாம்.

(4) அத்தகைய முறி ஒவ்வொன்றும், விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய விதத்திலும் அத்தகைய நியதிகளுக்கும் அமைய வழங்கப்படல் வேண்டும்.

விதிகள்

7ஆ. அமைச்சர், விதித்துரைக்கப்படுவதற்கு இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்படும் ஏதேனும் கருமம் தொடர்பில் விதிகளை ஆக்கலாம்.

குறித்த சில கம்பனிகளி லுள்ள வேலை யாட்கள் தொடர் பிலான சிறப் பேற்பாடுகள்

7இ. பகிரங்க கூட்டுத்தாபனமொன்றின் பணிகளைப் பொறுப்பேற்கும் அல்லது அரசாங்கத்துக்குச் சொந்த மான ஏதேனும் தொழிற் பொறுப்பு முயற்சியை பொறுப்பேற்றுக் கொண்டுநடாத்தும் ஏதேனும் கம் பெனியில் உள்ள வேலையாள் ஒருவர் இச்சட்டத்தின் 5 (1) ஆம் பிரிவின் நோக்கங்களுக்காகத் தீர்மானிப் பதில், அத்தகைய கம்பெனியில் ஐந்து வருட சேவைக் காலத்தைப் பூர்த்தியாக்கியுள்ளாரா என பகிரங்கக் கூட் டுத்தாபனத்தில் அல்லது அரசாங்கத்துக்குச் சொந்த மான தொழிற்பொறுப்பு முயற்சியில் உள்ள அவரது சேவைக்காலப் பகுதியும் சேர்க்கப்படுதல் வேண்டும்.".

3. இச்சட்டத்தினால் முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்படும் திருத்தம், எல்லா நோக்கங்களுக்காகவும் 1987 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் தேதி நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல்வேண்டும். திருத்தத்தின் கடந்தகாலத் தையும் உள்ள டக்கும் பயன்.

4. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஒவ்வாமை எதுவும் இருக்கும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை இருக்கும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 ; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.